CoverageReport: TCS IT Wiz – Coimbatore Edition

**Publication:** Dinamalar
**Date:** 17/08/2014
**Edition:** Coimbatore
**Page No:**3
**Headline:**TCS announces quiz for school students

# பள்ளிகள் இடையே புதிர் போட்டி டி.சி.எஸ்., நிறுவனம் ஏற்பாடு

**கோவை** • 'டாடா கன்சல்டன்சி நிறுவனம்' சார்பில், தொழில் நுட்பம் சார்ந்த புதிர் போட்டி கோவையில் நடக்கிறது. நாட்டின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமான, 'டாடா கன்சல டன்சி நிறுவனம்' இந்தியாவில், 14க்கும் மேற்பட்ட இடங்களில் தொழில்நுட்பம் சார்ந்த புதிர் போட்டி நடத்தியுள்ளது. அதன் ஓர் அங்கமாக ஆக., 26ல், ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலைய ரங்கத்தில் 'டி.சி.எஸ்., ஐ.டி விஷ் – 2014' என்ற தலைப்பில், புதிர் போட்டி நடத்துகிறது. இப்போட்டியில் எட்டாம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர் பங் கேற்கலாம். ஒரு அணிக்கு இரண்டு பேர் விதம் ஒரு பள்ளியி லிருந்து, 10 அணிகள் போட்டியில் பங்கேற்கலாம். பங்கேற்க விரும்புபவர்கள், தங்கள் பள்ளியின் வாயிலாக ஆக., 24க்குள் முன்பதிவு செய்ய வேண்டும். மேலும் தகவல்களுக்கு 0422–6688002 அல்லது 9840252255 என்ற எண்களுக்கு அழைக் கலாம். ஆன்லைனில் *www.tcsitwiz.com* என்ற இணையதள முகவ ரியின் மூலம் பதிவு செய்யலாம்.

CoverageReport: TCS IT Wiz – Coimbatore Edition

**Publication:** Dinamalar
**Date:** 27/08/2014
**Edition:** Coimbatore
**Page No:**4
**Headline:**St Judges wins TCS quiz in Coimbatore

## பள்ளிகளுக்கிடையே வினாடி – வினா போட்டி



டாடா கன்சல்டன்சி சர்வீஸ் (டி.சி.எஸ்.,) நிறுவனம் சார்பில், பள்ளிகளுக்கிடையேயான வினாடி – வினாபோட்டி, ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கத்தில் நேற்று நடந்தது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சென்னை, டி.சி.எஸ்., வளர்ச்சிச் சந்தைப் பிரிவு தலைவர் விஸ்வநாதன் பரிசுகள் வழங்கினார்.

**கோவை** • டி.சி.எஸ்., நிறுவனம் ஆண்டுதோறும் ஐ.டி., புதிர்போட்டியினை நாடுமுழுவதும் பள்ளிகளுக்கிடையே நடத்தி வருகிறது. நடப்பாண்டிற்கான போட்டி துவங்கிய நிலையில், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டத்திற்குட்பட்ட பள்ளிக்கிடையேயான போட்டி ஆர்.எஸ்.புரம் கலையரங்கில் நேற்று நடந்தது. இதில் 72 பள்ளிகளைச் சேர்ந்த எட்டு முதல் பிளஸ்2 வரையிலான மாணவர்கள் பங்கேற்றனர். இந்தியாவின் பிரபல குவிஸ் மாஸ்டர் கிரி போட்டியை தொகுத்து வழங்கினார். எழுத்துப்பூர்வமான ஆரம்ப சுற்றில் பங்கேற்ற 479 அணிகளில், ஆறு அணிகள் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது. தொடர்ந்து நடந்த பிராந்திய இறுதிப்போட்டியில், கோத்தகிரி, செண்ட் ஜூடஸ் பப்ளிக் பள்ளி மாணவர்க்ளான ஆசிக் ரேஜி, அஸ்வின் பிலிப் ஆகியோர் சேம்பியன்ஷிப் பெற்று அசத்தினர். இரண்டாமிடத்தை கோவை, பாப்பநாயக்கன்பாளையம் ஜி.கே.டி மெட்ரிக் பள்ளி மாணவர்களான சரத் சந்தர், ஹரி கிருஷ்ணன் ஆகியோர் தட்டிச் சென்றனர். வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சென்னை, டி.சி.எஸ்., வளர்ச்சிச் சந்தைப் பிரிவு தலைவர் விஸ்வநாதன் பரிசுகள் வழங்கினார், சேம்பியன்ஷிப் பெற்ற கோத்தகிரி மாணவர்கள் வரும் டிசம்பர் மாதம் மும்பையில் நடக்கும் இறுதிப் போட்டியில், 14 அணிகளுடன் போட்டியிட உள்ளனர்.